# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

**அனுப்புநர்**

**முனைவர். ப. ராஜ்குமார், MA.,LLB.,Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 781 /2015 / எம்சி. 8 நாள் : 25 .03.2015</u>**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **27.03.2015 வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - மார்ச் 2015

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி கட்டுமான பணிகளான நீர் உந்து குழாய், நீர்கொணரும் குழாய், உயர்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் குடிநீர் விநியோக குழாய் அமைக்க அரசு ஆலோசகர்களான தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகம் அவர்களால் விரிவான திட்ட அறிக்கை திருத்திய விலைவிகித பட்டியலின்படி மதிப்பீட்டு தொகை ரூ.10301 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது – கடன் உதவி, மானிய நிதி உதவி, குடிநீர் இணைப்பிற்கான வைப்பு தொகை மற்றும் கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது– மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் பைலட் சோலார் சிட்டியாக சோலார் சிட்டீஸ் வளர்ச்சி திட்டத்தின் வழிகாட்டுதலின்படி ரூ. 2.50 கோடி மத்திய அரசு நிதி உதவியுடன் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளுதல் - வரைவு திட்ட அறிக்கையினை மரபு சாரா எரிசக்தி துறை அமைச்சரகத்திற்கு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் - 3 சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ளளுதல் - விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டது – முதற்கட்டமான ரூ554.35 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோருதல் - நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்தல் - தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) - 2014-15ன்கீழ் மதிப்பீடு ரூ. 1763.40 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **5** | பொறியியல் பிரிவு - மண்டல வாரியாக சாலை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **6** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் பகுதிகளில் 2014–15 ஆண்டிற்கு ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ. 20.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 32.224 கி.மீ.நீளத்திற்க்கு புதிதாக தார்சாலைகள் அமைத்தல் மற்றும் செப்பனிடுதல் – ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டு திட்டம் 2014–15 (IUDM) திட்டத்தில் கீழ் நிதியுதவி மற்றும் நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு கருத்துரு அனுப்ப அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோக அபிவிருத்தி செய்யவும் – இப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.15020.00 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, மானிய நிதி உதவி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநகரகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

| | |
|---|---|
| **8** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி மற்றும் காளப்பட்டி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோக அபிவிருத்தி செய்யவும் – இப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.19880 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, மானிய நிதி உதவி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **9** | பொறியியல் பிரிவு - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.377.13 கோடியில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - பொது மக்களிடமிருந்து பாதாக சாக்கடை இணைப்பிற்கு சேவைக் கட்டணம், வைப்புத்தொகை வசூலித்தல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்க துணை விதிகளுக்கு நிபந்தனைகளுடன் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி பகுதிகளுக்கு கூடுதலாக 4 MLD பில்லூர் குடிநீர் வழங்குதல் - வார்டு 99, முல்லை நகர் கீழ்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து வெள்ளலூர் சாலை வழியாக மேட்டூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை 300 மி.மீ. விட்ட வார்பிருப்பு குழாய் அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **11** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - குறிச்சி பகுதிகளுக்கு கூடுதலாக 4 MLD பில்லூர் குடிநீர் வழங்குதல் - வார்டு 99, முல்லை நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் 4 .லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் நீருந்திகள் பொருத்துதல் – மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **12** | பணியமைப்பு -கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் - அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர் பகுதியில் மேட்டுப்பாளையம் சாலையில் மழைநீர் வடிகால் புதுப்புத்து மூடுபலகை அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 73.20 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களுக்காக வரையறுக்கப்பட்ட வார்டுகளில், மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு பகுதியை குடிநீர் அத்தியவசிய தேவையை கருதி மாநகராட்சியில் மாற்று இடம் இல்லாததாலும் உயர்மட்ட நீர் தேக்க தொட்டி மேற்படி இடத்தில் கட்ட அனுமதியும் , பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு பகுதியை அந்த பிரிவிலிருந்து (பயன்பாட்டிலிருந்து) பொது ஒதுக்கீட்டுக்கு மாற்றி அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநகரத்திற்கு பிரேரனை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

**(குறள் - 738)**

**விளக்கம்**

பசிப்பிணி, உடற்பிணி இன்மை, பொருட்செல்வம், விளைபொருள், நுகர்பொருள் இயற்றிவரும் இன்பம், பகையினின்று பாதுகாப்பு இவை நாட்டைச் சிறப்பிக்கும் அணிகலன்கள்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம் - 1

கோயம்புத்துார் மாநகரின் அவிநாசி சாலையையும், மேட்டுப்பாளையம் சாலையையும் இணைக்கும் அண்ணா மேம்பாலத்தின் வடபகுதியில் உள்ள புரூக்பாண்ட் சாலைக்கு செல்லும் பாலத்தின் பக்கவாட்டு சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் வாகன போக்குவரத்திற்கு மிகவும் சிரமம் ஏற்படுவதுடன் விபத்துக்களும் நிகழ்ந்து வருகின்றன.

அபரிமிதமாக பெருகிவரும் வாகன போக்குவரத்தை கருத்தில்கொண்டு, அவிநாசி மேம்பாலம் முதல் சிரியன் சர்ச் சாலை வரை இச்சாலையை அகலப்படுத்தித் தருமாறும், இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, நிலம் கையகப்படுத்த வேண்டியிருப்பின் அருகாமையில் உள்ள CS & W மில் நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தில் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கவும், மாநில நெடுஞ்சாலைத்துறையைக் கேட்டுக் கொள்ளும் பிரேரணையை அரசுக்கு அனுப்பும் சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

### சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 27.03.2015

ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் - 2

அரசாணை எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.9.1996ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1996ன்படி, கோயம்புத்துார் மாநகராட்சிக்கு நான்கு உதவி ஆணையாளர் (வார்டு) பதவியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசாணை (எம்.எஸ்.) எண் 40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (MC-4) துறை நாள் 24.02.2010ன்மூலம் மாநகராட்சி பொதுப்பணி விதிகளில் கொண்டுவரப்பட்ட விதி திருத்தத்தின்படி, தமிழ்நாடு குடிமைப் பணியிலிருந்து அயற்பணி அடிப்படையில் துணை ஆட்சியர் அந்துஸ்துள்ள அலுவலர்கள் இம்மாநகராட்சியின் உதவி ஆணையாளர் (வார்டு) பதவியில் பணியாற்ற வழிவகை செய்யப்பட்டதின் அடிப்படையில், இம்மாநகராட்சியில் கிழக்கு மற்றும் மேற்கு மண்டலங்களில் உதவி ஆணையாளர் (வார்டு) பதவியிடங்களில் துணை ஆட்சியாளர்கள் பணியமர்த்தப்படு கின்றனர்.

இம்மாநகராட்சியிலேயே பல வருடங்களாக பணிபுரிந்து அனுபவமுள்ள திறமையான அலுவலர்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளனர். மாநகராட்சி நிர்வாகத்தில் அனுபவமுள்ள அலுவலர்களைக்கொண்டு உதவி ஆணையாளர் (வார்டு) பணிகளை மேற்கொண்டால் மாநகராட்சி பணிகளை திறம்பட செயல்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவைகளை வழங்க முடியும்.

எனவே, துணை ஆட்சியர் அயற்பணி அடிப்படையில் மாநகராட்சி உதவி ஆணையாளர் (வார்டு) பதவியிடங்களில் பணியமர்த்த வழிவகை செய்யும் 1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொதுப்பணி விதிகளில் உரிய விதித்திருத்தம் செய்து அப்பதவியிடங்களில் இம்மாநகராட்சி அலுவலர்களை பணியமர்த்த ஏதுவாக உரிய உத்திரவுகளை பிறப்பித்திட தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளும் பிரேணைகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளரை இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

### சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 27.03.2015

ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 1**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி கட்டுமான பணிகளான நீர் உந்து குழாய், நீர்கொணரும் குழாய், உயர்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் குடிநீர் விநியோக குழாய் அமைக்க அரசு ஆலோசகர்களான தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகம் அவர்களால் விரிவான திட்ட அறிக்கை திருத்திய விலைவிகித பட்டியலின்படி மதிப்பீட்டு தொகை ரூ.10301 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது – கடன் உதவி, மானிய நிதி உதவி, குடிநீர் இணைப்பிற்கான வைப்பு தொகை மற்றும் கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: 1. கோயம்புத்தூர் மாநகராட்சி மாநகர மன்ற தீர்மான எண்.336 நாள். .12.2013
2. தமிழ் நாடு நகர்புர கட்டுமானநிதிச் சேவை நிறுவனம் (TNUIFSL) கடிதம் எண்.TNUDF/Project/Coimbatore WSIS நாள்.09.03.2015

--------

பார்வை 1–ல் கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சி மாநகர மன்ற தீர்மானத்தில், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகத்தால் கொடுக்கப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 4255.00 லட்சத்திற்கு 5 சிப்பங்களாக பிரித்து பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பவும், ரூ 4255.00 லட்சத்தில் மானியத் தொகை ரூ 1113.62 லட்சம் போக மீதத் தொகை ரூ 3141.38 லட்சம் அரசு மானியமாக பெறவும் மற்றும் பொது நிதியின் மூலம் இத்திட்டத்தினை திட்ட மேலாண்மை குழுவின் (Project Management Unit) மூலம் பணிகள் மேற்பார்வையிட விருப்ப அறிக்கை (EOI) கோரி தேர்வு செய்யவும் மாமன்றஅனுமதி பெறப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் கண்ட தமிழ் நாடு நகர்புர கட்டுமானநிதிச் சேவை நிறுவன (TNUIFSL) கடிதத்தில் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு நிதி வழிவகை, (அட்டவணை–1) வீட்டு உபயோக முறை, வீட்டு உபயோகமல்லாத முறை, தொழிற் சாலை, வணிகவளாகங்கள் – குடிநீர் இணைப்புகளுக்கான வைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டண விகிதங்கள் கீழ்கண்டவாறு வசூலிக்க கொடுக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் அனுமதி பெற்று அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(அட்டவணை–1)

| வரிசை எண் | நிதிக்கான வழிவகை | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | தமிழ் நாடு நகர்புர கட்டுமானநிதிச் சேவை நிறுவனத்திடமிருந்து கடன் உதவி (TNUIFSL) KFW ன் கீழ் உதவி நிறுவனம் SMIF-TN-II-2 | 61.80 |
| 2 | PSGF நிறுவனத்திடமிருந்து மானிய நிதி உதவி KFWன் கீழ், உதவி நிறுவனம் SMIF-TN-II-2 மானிய நிதி உதவி | 30.90 |
| 3 | மாநகராட்சியின் பங்குத் தொகை | 10.31 |
| | மொத்த திட்ட மதிப்பீடு | 103.01 |

(அட்டவணை–2)

| கட்டிட அளவு வரி விதிப்பு முறை சதுர அடியில் | உத்தேசிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை ரூபாயில் | | | உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விகிதம் ரூபாயில் | | |
|---|---|---|---|---|---|---|
| | வீட்டு உபயோக முறை | வீட்டு உபயோகம் அல்லாத முறை | தொழில் சாலை | வீட்டு உபயோக முறை | வீட்டு உபயோகம் அல்லாத முறை | தொழில் சாலை |
| 500க்கு குறைவாக | 5000 | 20000 | 25000 | 100 | 300 | 600 |
| 500–1200 | 11000 | 25000 | 30000 | 150 | 450 | 900 |
| 1200–2400 | 19000 | 30000 | 40000 | 200 | 600 | 1200 |
| 2400க்கு குறைவாக | 29000 | 35000 | 50000 | 250 | 750 | 1500 |
| சிறப்பு இணைப்புகள் | 29000 | 35000 | 50000 | 250 | 750 | 1500 |
| சராசரி(wt. Average) | 11596 | 25054 | 30000 | 150 | 450 | 900 |

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி கட்டுமான பணிகளான நீர் உந்து குழாய், நீர்கொணரும் குழாய், உயர்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் குடிநீர் விநியோக குழாய் உயர்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் குடிநீர் விநியோக குழாய் அமைக்க விரிவான திட்ட அறிக்கை அரசு ஆலோசகர்களான தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு கழகம் அவர்களால் திருத்திய விலை விகித பட்டியலின்படி தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் நாடு நகர்புர கட்டுமானநிதிச் சேவை நிறுவனத்திடமிருந்து (TNUIFSL) பெறப்பட்ட ஆலோசனைகளின்படி இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கு குடிநீர்திட்ட அபிவிருத்தி பணிகளுக்கான நிதி உதவி, கடன் உதவி, வைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டண விகிதங்கள் (அட்டவணை 1 மற்றும் 2) கீழ்கண்ட வழிவகைகளின்படி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. தமிழ் நாடு நகர்புர கட்டுமானநிதிச் சேவை நிறுவனத்திடமிருந்து (TNUIFSL)KFW ன் கீழ் உதவி நிறுவனம் SMIF-TN-II-2 கடன் உதவி மற்றும் மானிய நிதி உதவி பெறலாம் (அட்டவணை1) மேற்கண்ட வைப்பு தொகை மற்றும் கட்டண விகிதங்களின்படி வசூலிக்கலாம். (அட்டவணை 2)
2. மாநகராட்சியின் பங்கு தொகையாக ரூ.10.31 கோடி திட்டம் செயல்படுத்தப்படும் போது செலவு செய்யலாம்
3. ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறை வைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டண விகிதம் 10% உயர்த்தி அமல் படுத்தலாம்.
4. குடிநீர் இணைப்பிற்கான வைப்பு தொகை மற்றும் கட்டண விகிதங்கள் குறைவாக உள்ளதாலும் குடிநீர் பணிக்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்கான செலவு தொகை அதிகமாகவும் இருப்பதால் குடிநீர் வடிகால் நிதியில் நிதி பற்றாகுறை ஏற்பட்டுள்ளது . இப்பற்றா குறையை நிவர்த்தி செய்ய ரூ.12.66கோடி மற்றும் ரூ13.11கோடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து திட்டம் செயல்படுத்தும் 2 வருடங்களுக்கு செலவு செய்யலாம்
5. திட்டம் செயற்படும் பொழுது திட்டத்திற்கான கடனுக்கான வட்டி தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு : மாண்புமிகு மேயா் அவா்களின் 09.03.2015 ம் தேதிய முன்அனுமதிக்கு பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.648/2013/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 426 நாள் 27.03.2015</u>**

பின்னேற்பு வழங்கப்பட்டது. மாண்புமிகு மேயர், ஆணையாளர், துறைத் தலைமை ஆகியோர் கொண்ட குழு, மாமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ள கட்டண விகித திருத்தங்கள் குறித்து முடிவு செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

கோவை மாநகராட்சியில் மரபு சாரா சக்தி திட்டங்களை மரபு சாரா எரிசக்தித்துறை அமைச்சரகத்தின் பைலட் சோலார் சிட்டி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ. 2.50 கோடி நிதி மற்றும் மாநகராட்சி பங்காக ரூ. 2.50 கோடியினை மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அமல் படுத்தவும், மேற்கண்ட திட்ட நிதியில் ரூ. 2.50 கோடியினை மாநகராட்சிக்கு மரபு சாரா எரிசக்தி துறை அமைச்சரகம் வழங்கக்கோரி மன்ற தீர்மானம் 372 நாள் 30.01.2014 –ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தனது கடித எண் சிறப்பு 4/2014/ AE நாள் 11.02.2014ல் கோயம்புத்தூர் மாநகராட்சியினை பைலட் சோலார் சிட்டி திட்டத்தில் இணைக்க கோரியும் அத்திட்டத்திற்குரிய நிதி உதவி வழங்கவும் கோரப்பட்டது.

அதனடிப்படையில் புதிய மற்றும் மரபு சாரா எரிசக்தி துறை அமைச்சரகம் (சூரிய சக்தி குழுமம்) தனது கடித எண் 40/10/2008-09/UICA(SE)ல் மேதகு குடியரசுத்தலைவா் அவா்கள் வழங்கிய ஒப்புதலின் படி, கோயம்புத்தூர் மாநகராட்சியினை, பைலட் சோலார் சிட்டி யாக சோலார் சிட்டீஸ் வளர்ச்சி திட்டத்தின் வழிகாட்டுதலின் படி ரூ. 2.50 கோடி மத்திய அரசு நிதி உதவியுடன் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வளர்ச்சிப்பணிக்கான நிதி TEDA/ கோவை மாநகராட்சி சமர்ப்பிக்கும் வரைவு திட்ட அறிக்கையின் தகுதி அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கான் திட்டத்தின்படி கீழ்க்கண்ட இடங்களில் சூரிய சக்தி மின் கலன்களை முதற்கட்டமாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | திட்டமதிப்பீடு |
|---|---|---|
| 01. | வெள்ளியங்காடு நீர் உந்து நிலையத்தில் 70 Kw சூரிய சக்தி மின் கலன் அமைத்தல் | 75.00 |
| 02. | வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 70 Kw சூரிய சக்தி மின் கலன் அமைத்தல் | 75.00 |
| 03. | ஒண்டிப்புதூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 70 Kw சூரிய சக்தி மின் கலன் அமைத்தல் | 75.00 |
| 04. | உக்கடம் கழிவு நீர்சுத்திகரிப்பு நிலையத்தில் 70 Kw சூரிய சக்தி மின் கலன் அமைத்தல் | 75.00 |
| 05. | வெள்ளலூர் குப்பை கிடங்கில் 70 Kw சூரிய சக்தி மின் கலன் அமைத்தல் | 75.00 |
| | மொத்தம் | 3,75,00,000 |

எனவே மேற்கண்ட இப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் இப்பணிகளுக்கான நிதி உதவியினை MNRE (Solar Group)வழங்க வேண்டியும் இப்பணிகளுக்கான வரைவு திட்ட அறிக்கையினை புதிய மற்றும் மரபு சாரா எரிசக்தி துறை அமைச்சரகத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க. எண் : சிறப்பு 4/2014/ AE

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 427 நாள் 27.03.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் அக்டோபர் 2011ல் புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் ரூ.1077.35 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு தி/ள். சன்கான் இன்ஜினியர்ஸ் பி லிமிடெட் நிறுவனத்தார் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தினர் சம்பந்தப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து மழைநீர் வெள்ளம் அதிகமாக செல்லும் பகுதிகள், தெருக்களின் அடர்த்தி மற்றும் மக்கள் நெருக்கம் உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வடிகால்கள் கட்டுவதற்கு மூன்று பகுதிகளாக பிரித்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து சமர்ப்பித்துள்ளனர்.

1. பகுதி – I – ரூ.554.35 கோடி
2. பகுதி – II – ரூ.386.24 கோடி
3. பகுதி – III – ரூ.136.76 கோடி

இதில் முதற்கட்டமாக, பகுதி – I –ல் ரூ.100 கோடிகள் மதிப்பீட்டில், மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மழைநீர் வெள்ளம் அதிகமாக செல்லும் பகுதிகள், தெருக்களின் அடர்த்தி மற்றும் மக்கள் நெருக்கம் உள்ள பகுதிகளில் வடிகால்கள் கட்டுவதற்கு தி/ள். சன்கான் இன்ஜினியர்ஸ் பி லிமிடெட் நிறுவனத்தாரை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்க அறிவுறுத்தியதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தார் தங்களது விரிவான திட்ட அறிக்கையை 4 சிப்பங்களாக பிரித்து கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

| | |
|---|---|
| சிப்பம் – 1 | –ரூ. 40.99 கோடி |
| சிப்பம் – 2 | –ரூ. 46.59 கோடி |
| சிப்பம் – 3 | –ரூ. 62.24 கோடி |
| சிப்பம் – 4 | –ரூ. 1 7.16 கோடி |
| மொத்தம் | ரூ. 166.98 கோடி |

எனவே முதற்கட்டமாக ரூ.166.98 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில், மழைநீர் வடிகால் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டு மாமன்ற தீர்மான எண்.195 நாள்.07.08.2014 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பணிகளின் அவசர அவசியம் கருதி பகுதி I ற்குரிய ரூ.554.35 கோடி நிதி ஒதுக்கீடு கோரியும் நிர்வாக அனுமதி கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5771/2014/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 428 நாள் 27.03.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2014-15) -ன் கீழ் மதிப்பீடு ரூ.**1763.40** இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்கண்டுள்ளவாறு **3** சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | சிப்பத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததார் |
|---|---|---|---|---|---|
| சிப்பம் எண் 1 | | | | | |
| வார்டு எண் **37**க்குட்பட்ட காந்தி வீதி,திரு.வீ.கா வீதி மற்றும் சக்கரையார் வீதி, வி.ஒ.சி வீதி மற்றும் பாரதி வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 35.00 | 677.00 | **12.02.15** முதலாம் அழைப்பு | **1.** தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட் **4.99** % அதிகம்<br><br>**2.** தி/ள்.ஜெ.ராபர்ட் ராஜா **5.95** % அதிகம் | தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட் **4.98** % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| வார்டு எண் **56**க்குட்பட்ட கருணாநிதி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் **57**க்குட்பட்ட பாரதி நகர் குறுக்கு தெரு மற்றும் பெரியார் நகர் மசக்காளிப்பாளையம் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 35.00 | | | | |
| வார்டு எண் **62** க்குட்பட்ட ஐயர் லேஅவுட் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 32.00 | | | | |
| வார்டு எண் **63** க்குட்பட்ட சென்ட்ரல் ஸ்டுடியோ கள்ளிமடை குறுக்கு சாலை பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 31.00 | | | | |
| வார்டு எண் **66** க்குட்பட்ட கருவலூர் மாரியம்மன் கோயில் மற்றும் ராஜீவ் காந்தி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 35.00 | | | | |
| வார்டு எண் **66** க்குட்பட்ட தொட்டச்சி அம்மன் கோயில் வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் **75** க்குட்பட்ட மாரியம்மன் கோயில் வீதி மற்றும் பெருமாள் கோயில் வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் **64** க்குட்பட்ட குளத்தேரி ரோடு பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 29.50 | | | | |
| வார்டு எண் **65** க்குட்பட்ட உடையாம்பாளையம் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் **59** க்குட்பட்ட பழனியப்பா லே அவுட் மற்றும் ஆர்.கே.கே.நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் **60** க்குட்பட்ட திப்பே கவுண்டர் வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 30.00 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வார்டு எண் 85 க்குட்பட்ட சாவித்திரி நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 75.00 | | | | |
| வார்டு எண் 85 க்குட்பட்ட அசோக் நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 75.00 | | | | |
| வார்டு எண் 86 க்குட்பட்ட உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அணுகு சாலைக்கு தார்தளம் அமைத்தல் | 75.00 | | | | |
| வார்டு எண் 86 க்குட்பட்ட அண்ணா நகர் மற்றும் பிலால்நகர் சாலையில் தார்தளம் அமைத்தல் | 74.50 | | | | |
| சிப்பம் எண் 2 | | | | | |
| வார்டு எண் 45 க்குட்பட்ட ஆர்.கே.நகர், முல்லை நகர் , ராஜீவ் நகர், சுப்பம்மாள் நகர், எட்வின் நகர் காமகோடிநகர் பகுதிகளில் மறுதார்த்தளம் அமைத்தல் | 50.00 | 575.40 | 12.02.15 முதலாம் அழைப்பு | 1. திரு. அம்மாசையப்பன் 7.04 % அதிகம்<br><br>2. திருமதி. எம்.சரோஜினி 5.09 % அதிகம் | திருமதி. எம்.சரோஜினி 4.96 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| வார்டு எண் 45 க்குட்பட்ட பாலாஜி லே அவுட், வேதாம்பாள் நகர் மற்றும் புதிய லேஅவுட் பகுதிகளில் மறுதார்த்தளம் அமைத்தல் | 50.00 | | | | |
| வார்டு எண் 48 க்குட்பட்ட ஜெயசிம்மன் வீதியில் மறுதார்த்தளம் அமைத்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் 50 க்குட்பட்ட டாடாபாத் வீதி 1,2,3 மறுதார்த்தளம் அமைத்தல் | 48.40 | | | | |
| வார்டு எண் 51 க்குட்பட்ட மாரியம்மன் கோயில் வீதியில் சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைத்தல் | 17.10 | | | | |
| வார்டு எண் 74 க்குட்பட்ட ஜி.எம்.நகர் மற்றும் குறுக்கு சாலையில் தார்த்தளம் அமைத்தல் | 31.50 | | | | |
| வார்டு எண் 74 க்குட்பட்ட ஜி.எம்.நகர் மற்றும் கோட்டைபுதூர் பகுதியில் சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைத்தல் | 14.00 | | | | |
| வார்டு எண் 6 க்குட்பட்ட பூம்புகார் நகர், பாரதிநகர் 1,2, எஸ்.பி நகர், லட்சுமி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 50.00 | | | | |
| வார்டு எண் 6 க்குட்பட்ட லூனாநகர், மெயின் பிரதான சாலை முதல் சாய் கார்டன் தடாகம் சாலை வரை மறுதார் தளம் அமைத்தல் | 35.00 | | | | |
| வார்டு எண் 6 க்குட்பட்ட வித்யா காலனி பிரதானசாலை மறுதார் தளம் அமைத்தல் | 35.00 | | | | |
| வார்டு எண் 7 க்குட்பட்ட பாரிநகர் ,கிருஷ்ணாவீதி ராஜிவ் காந்தி வீதி, கோல்டன் நகர், அன்பு நகர்,ஆட்டோநகர்,கோபால் தோட்டம், மூகாம்பிகை கோயில் வீதி மறுதார் தளம் அமைத்தல் | 57.00 | | | | |
| வார்டு எண் 5 க்குட்பட்ட கன்னியா நகர் மற்றும் சுப்பையா கவுண்டர் வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 25.00 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வார்டு எண் 13 க்குட்பட்ட அம்மன் கோயில் வீதி, ராமலிங்கம் நகர் 3வது வீதி குறுக்கு தெரு மற்றும் டீச்சர்ஸ் காலனி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 20.90 | | | | |
| வார்டு எண் 14 க்குட்பட்ட நல்லம்மாள் வீதியிலிந்து திலகர் வீதி,திரு.வீ.கா வீதி, புவனேஷ்வரி நகர், பவத்சீங் வீதி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 16.50 | | | | |
| வார்டு எண் 16 க்குட்பட்ட இ.பி காலனி, வடவள்ளி கோபாலபுரம் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 25.00 | | | | |
| வார்டு எண் 17 க்குட்பட்ட வடவள்ளி பாலாஜி நகர் மற்றும் நாராயணசாமி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 25.00 | | | | |
| வார்டு எண் 18 க்குட்பட்ட மகாராணி அவென்யூ வீரகேரளம் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல். | 25.00 | | | | |
| வார்டு எண் 19 க்குட்பட்ட எம்.ஜி.காலனி மற்றும் வசந்தம் நகர் வீரகேரளம் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 20.00 | | | | |
| சிப்பம் எண் 3 | | | | | |
| வார்டு எண் 38 க்குட்பட்ட கருப்பண்ண கவுண்டர் லேஅவுட் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 74.00 | 511.00 | 12.02.15 முதலாம் அழைப்பு | 1. திரு. அம்மாசையப்பன் 14.68 % அதிகம்<br>2. திரு. ஏ.வெங்கடாச்சலம் 5.41 % அதிகம் | திரு. ஏ.வெங்கடாச்சலம் 4.95 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| வார்டு எண் 39 க்குட்பட்ட சாந்திநகர், எஸ்.டி.வி.நகர் மற்றும் சின்னசாமி அவென்யு பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 70.00 | | | | |
| வார்டு எண் 40 க்குட்பட்ட இ.பி.காலனி மெயின் ரோடு மற்றும் பி.பி.சி காலனி மெயின் ரோடு பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 70.00 | | | | |
| வார்டு எண் 41 க்குட்பட்ட அசோக்நகர் மற்றும் பாலமுருகன் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 42.00 | | | | |
| வார்டு எண் 41 க்குட்பட்ட மருதமலைகவுண்டர் வீதி,தொடர்ச்சி, சுந்தரேசன் அவென்யு, தங்கம்மாள் நகர்–2 மற்றும் எம்.கே.பி காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 70.00 | | | | |
| வார்டு எண் 41 க்குட்பட்ட ஸ்ரீநகர்,திருவெங்கடசாமி நகர் மற்றும் தங்கம்மாள் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 75.00 | | | | |
| வார்டு எண் 55 க்குட்பட்ட லட்சுமி மில் காலனி, இந்திரா நகர் மற்றும் வீரபத்திரன் லேஅவுட் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 50.00 | | | | |
| வார்டு எண் 47 க்குட்பட்ட கணபதி கார்டன், காந்தி நகர் 5வது வீதி,கணேஷ் லேஅவுட் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 60.00 | | | | |

மேலும், மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 9642/2014/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 429 நாள் 27.03.2015**

சிப்பம் 1-ல் வார்டு எண் 63க்குட்பட்ட சென்ட்ரல் ஸ்டுடியோ கள்ளிமடை குறுக்குச் சாலை பகுதி என்பதற்குப் பதிலாக தியாகி சண்முகா சாலை என திருத்தம் செய்து அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | சிப்பத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததார் |
|---|---|---|---|---|---|
| **கிழக்கு மண்டலம்** | | **சிப்பம் எண் 1** | | | **கோப்பு எண்.8516/ *2014*** |
| வார்டு எண் 32 விசுவாசபுரம் சர்ச் 1-ம் வீதி முதல் 9-வது வீதி வரை தார்தளம் அமைத்தல் பணி | 65.00 | 270.00 | 23.01.15 | 1.திரு.அம்மாசையப்பன் 13.16 % அதிகம்<br>2.திரு.வெங்கடாச்சலம் 5.00 % அதிகம் | திரு.வெங்கடாச்சலம் 4.90 % அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |
| வார்டு எண் 32க்குட்ப்பட்ட குமரன் நகர்இ ராமாத்தாள் நகர்இகே வி நகர் விசுவேசுவரா நகர் மற்றும் டிடி எல் கார்டன் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 50.00 | | | | |
| வார்டு எண். 36 க்குட்பட்ட நேரு நகர் 1-வது வீதி முதல் 9-வது வீதி வரை உள்ள பழுதான தார் சாலைகளை புதுப்பித்தல் | 30.00 | | | | |
| வார்டு எண் 58க்குட்ப்பட்ட நீலிகோணம்பாளையம் பகுதிகளில் உள்ள அங்கம்மாள் லே அவுட் பிரதான சாலை, சக்தி சாலை,விநாயகர் கோவில் வீதி எண் 1,2 ல் தார் சாலை அமைத்தல் | 50.00 | | | | |
| வார்டு எண் 59க்குட்ப்பட்ட சூரியா நகர் ,சிவலிங்க புரம், சக்தி நகர் மற்றும் நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல். | 75.00 | | | | |
| **வடக்கு மண்டலம்** | | **சிப்பம் எண் 2** | | | **கோப்பு எண்.11530/ *2014*** |
| வார்டு எண்.1க்குட்பட்ட விநாயகர் கோவில் வீதியில் தார் சாலை அமைத்தல் | 33.00 | 227.48 | 23.01.15 | 1.திரு.அம்மாசையப்பன் 4.97 % அதிகம்<br>2.திரு.ராபர்ட் ராஜா 10.11 % அதிகம் | திரு.அம்மாசையப்பன் 4.90 % அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |
| வார்டு எண்.2க்குட்பட்ட ஆதித்யா ரெஸிடன்சி, மணீஸ் நகர், அம்பிகா நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 37.95 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வார்டு எண்.3க்குட்பட்ட பாரதி நகர் 1,2,3,4, தாமு கார்டன் 1,2, சக்தி அவென்யூ, எம்.எஸ்.ஆர் லே அவுட் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 49.63 | | | | |
| வார்டு எண்.4க்குட்பட்ட கேப் டவுன் காலனி, எஸ்.எஸ். நகர், மெக்கா நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 49.90 | | | | |
| வார்டு எண்.27க்குட்பட்ட சரவணம்பட்டி - துடியலூரிலிருந்து வேலப்பநாயக்கன்புதூர் வரை உள்ள பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 57.00 | | | | |
| மேற்கு மண்டலம் | | சிப்பம் எண் 3 | | கோப்பு எண்.6362/ *2014* | |
| வார்டு எண்.5 திருவேங்கடம் நகர் முதல் ராம் நகர் வரை மற்றும் சக்தி கார்டன் பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 20.00 | 221.00 | 23.01.15 | 1.தி/ள்.பி.செந்தில் அன் கோ 4.98 % அதிகம்<br><br>2.திரு.ராபர்ட் ராஜா 5.73 % அதிகம் | தி/ள்.பி.செந்தில் அன் கோ 4.89 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| வார்டு எண்.6 நடராஜ் லே அவுட் பி & டி காலனி பிரதான சாலை, சிவா நகர் மற்றும் அங்கப்பா லே அவுட் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 30.00 | | | | |
